1990 ஆகஸ்ட் 21]

the papers which they have passed before 1984, they have s cured only 40 or 45 per cent marks. They cannot also write those papers again. At least for those people, the Governm nt can show some consideration.

9–20 மணி

The Hon, Dr. K. Anbazhagan : Only if and when there is such a scarcity for qualified Teachers in Tamil Nadu, such applications can be considered.

சர்க்கரை தொழில் கல்வி டிப்ளமோ படிப்பு

** 5238* திரு. பா. அப்துல் சமத் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

சர்க்கரை தொழில் கல்வி டிப்ளமோ படிப்பை மீண்டும் தொழில்நுட்ப இயக்ககத்தின்கீழ் தொடங்கக்கூடிய செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிறைய சர்க்கரை ஆலைகள் இருக்கிற இந்த நிலையில், நம்முடைய அரசும் புதிய சர்க்கரை ஆலையைத் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிற இந்த நேரத்தில் இது போன்ற சர்க்கரைத் தொழில் கல்வி டிப்ளமோ படிப்பைத் தொடங்குவதற்கு, சூழ்நிலையின் தேவையைக் கருதி, அது ஏற்கெனவே நடத்தப்பட்டு வந்து இப்போது நிறுத்தப்பட் டிருக்கிறது என்பதையும் கருதி, அரசு மீண்டும் உரிய நடவடிக் கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயனத் தொழில் நுட்பப் பயிலகத் திலே நடத்தப்பட்ட அந்தப் பயிற்சி வகுப்பு மூன்றரை ஆண்டுக் காலம் கொண்டது ; டிப்ளமோ வழங்கப்பட்டது. அது 1986 ஆம் ஆண்டு வரை சிறப்பாக நடைபெற்றது. அந்தப் பயிற்சி பெறுகிறவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதில்லை என்ற அந்த அடிப்படையில் நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னரும் அந்தப் பயிற்சி வகுப்பைத் தனியாக நடத்துவதிலே அதிகப் பயன் இல்லை என்ற காரணத்தால், அம்முடியில் உள்ள சர்க்கரை

ஆராய்ச்சிப் பள்ளி, சர்க்கரை தொழில்நுட்ப பயிற்சி அளித்து வருகிற காரணத்தால் அந்தப் பயிற்சி நிலையத்திலே தேவைப் பட்டவர்கள் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தனியாக நடத்துவது நிறுத்தப்பட்டிருக்கிறது.

திருச்சி மத்திய சிறைச்சாலைக்குக் குடிநிர் வழங்குதல்

* *8721* திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது நிறைவுறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜூன் 1991-ல் திட்டம் நிறைவுறும் என எதிர்பார்க் கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறைக்குக் குடிநீர்த் திட்டம் 1983-ஆம் ஆண்டிலே ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்காக ரூ. 80 இலட்சம் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுவிட்டது. ஆனால் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் இந்தத் திட்டப் பணிகள் எதுவும் செயல் படுத்தப்படவில்லை என்று தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது. ஏன் இவ்வளவு நீண்ட காலதாமதம் ஆனது ? இந்தப் பணி எப்போது தொடங்கப்பட்டது. அப்போது அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு ? இப்போது எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு பற்றிய குறிப்பு இப்போது இல்லை. ஆனால் அரசாங்கம் எடுத்துள்ள முயற்சியின் காரணமாக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.